டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 15.08.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 049 - Madurai | Online Edition

# கடுகு சாகுபடி பரப்பளவின் அடிப்படையில் 26 மாநிலங்கள், 3 யூனியன் பிரதேசங்களுக்கு நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது

புது தில்லி, ஆக.14

இந்தியாவின் உயிரியல் வளங்களைப் பயன்படுத்தி வர்த்தக ரீதியிலான பத்து கடுகு ரகங்களை உருவாக்கிய பயனீர் ஓவர்சீஸ் கார்ப்பரேஷனிடமிருந்து அணுகல் பயன் பகிர்வு நிதியாக ரூ.15.52 கோடியைத் தேசிய பல்லுயிர் ஆணையம் விடுவித்து உள்ளது. இந்தத் தொகை 26 மாநில உயிரி பல்லுயிர் வாரியங்களுக்கும், 3 யூனியன் பிரதேச உயிரி பல்லுயிர் குழுமங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும். ஒவ்வொரு மாநிலத்திலும் கடுகு சாகுபடி செய்யப்பட்ட பரப்பளவின் அடிப்படையில் இந்தப் பங்கு கணக்கிடப்படும்.

பயனீர் ஓவர்சீஸ் கார்ப்பரேஷன் இந்த பத்து ரகங்களை தமது சொந்த ஆய்வகங்களில் உருவாக்கியது. ஆனால், அதன் மரபு தொகுப்புகள் வெளிப்படையான சந்தை, வர்த்தகர்களிடமிருந்து பெறப்பட்டதாகும். இதற்கான ஆதாரமாக ஒரு விவசாயி அல்லது சமூகத்தை அடையாளம் காணமுடியாத நிலையில், இந்நிகழ்வுகளில் அணுகல் பயன் பகிர்வு நிதியை வழங்குவதற்கு வழிமுறைகளை உருவாக்க தேசிய உயிரி பல்லுயிர் ஆணையம், நிபுணர் குழு ஒன்றை அமைத்தது.

நிபுணர் குழு பரிந்துரைத்த வழிமுறைகளுக்கு ஆணையம் ஒப்புதல் அளித்தது. அதன்படி, இடைத்தரகர்கள் மூலம் உயிரி வளங்கல் பெறப்படும்போது அணுகல் பயன் பகிர்வு நிதி, மாநில உயிரி பல்லுயிர் வாரியங்கள், யூனியன் பிரதேச பல்லுயிர் குழுமங்களுக்கிடையே பகிர்ந்தளிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.



சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்
- நிர்வாகி

# பயிர் பல்வகைப்படுத்தல் பயிற்சி

சேலம், ஆக.14

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம், கடத்தூர் அக்ரஹாரம் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் பயிர் பலவகைப்படுத்துதல் குறித்த பயிற்சி நடைபெற்றது. வேளாண்மை அலுவலர் த.நிவேதா ஸ்ரீ தலைமை தாங்கி விவசாயிகள் தனித்துவ அடையாள எண் பெறுதல், பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுவது மற்றும் மானிய திட்டங்கள் குறித்தும் எடுத்து கூறினார்.



வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்று இப்பயிற்சியின் நோக்கம் பற்றியும் எடுத்து கூறினார். முன்னோடி விவசாயி எம்.முத்துராமன் பயிற்சி-யாளராக கலந்து கொண்டு பயிர் பலவகைப்படுத்துதலில் பயிர் சுழற்சி, கலப்பு பயிர் மற்றும் உயர் மதிப்பு பயிர்கள் சாகுபடி குறித்தும் இதன் மூலம் அதிக வருமானம், நிலையான வருமானம் பெறும் வழிமுறைகள் குறித்து பயிற்சி அளித்தார்.

மேலும் பயிர் சுழற்சி மற்றும் ஊடுபயிர் சாகுபடி ஆகியவை மண்ணின் ஊட்டச்சத்துக்களை மீட்டெடுக்கின்றன என்றும் பயறு வகைப் பயிர்கள் நைட்ரஜனை நிலைநிறுத்துவதால் உரத்தேவை குறைகிறது என்றும் உரிய எடுத்துகாட்டுடன் விளக்கி கூறினார். துணை வேளாண்மை அலுவலர் (பொ) ப.மூர்த்தி, உதவி விதை அலுவலர் கே.ஆர்.தங்கராஜ், உதவி வேளாண்மை அலுவலர் க.பழனிசாமி, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சி,சரஸ்வதி, தீபன் முத்துசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# தக்காளி மற்றும் பப்பாளியிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், ஆக.14

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தக்காளி மற்றும் பப்பாளியிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி 18.08.26 மற்றும் 19.08.26 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மருதமலை சாலை வழி) கோயம்புத்தூரில் நடைபெறும்.

கீழ்க்காணும் மதிப்பூட்டப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

அவையாவன

- பப்பாளி – பழ ரச பானம், தயார் நிலைபானம், கேண்டி (மிட்டாய்)
- தக்காளி – ஊறுகாய், சூப், சாஸ், ஜாம், கெட்சப், உலர வைக்கப்பட்ட தக்காளி

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) – பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003. தொலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?



**15. ஓட்ஸ் சூப்**

**தேவையான பொருட்கள்**

ஓட்ஸ் — ½ கப்

கேரட் — 1

பீன்ஸ் — 5

மிளகு தூள் சிறிதளவு

உப்பு - தேவையான அளவு

**செய்முறை**

காய்கறிகளை வேக வைத்து ஓட்ஸ் சேர்த்து 8 நிமிடம் சமைக்கவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

**நாளை தொடரும்...**



## மணிலா சாகுபடியில் இயந்திரமயமாக்கல்

# நல்ல மகசூல் மற்றும் லாபம் கிடைப்பதாக விவசாயி பெருமிதம்



இராணிப்பேட்டை, ஆக.14

இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டாரம் கோடம்பாக்கம் கிராமத்தை சேர்ந்த விவசாயி பரந்தாமன். இவர் தனது நிலத்தில் நெல், மணிலா, உளுந்து என சாகுபடி செய்து வந்தார். மணிலா சாகுபடியில் விதைப்பு மற்றும் களை எடுக்கும் பணிகளுக்கு அதிக தொழிலாளர்கள் தேவைப்பட்டதால் சாகுபடி செலவு ஆண்டுகளில் அதிகரித்துக் கொண்டே சென்றது.

இந்த நிலையில் அட்மா திட்டத்தில் 2024 - 25 ஆம் ஆண்டு மணிலா சாகுபடியில் இயந்திரமயமாக்கல் என்ற என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பயிற்சியில் கலந்து கொண்டேன். அதில் மணிலாவில் விதைப்பு முதல் அறுவடை வரை பயன் படுத்தப்படும் இயந்திரங்கள் குறித்து விரிவாக பயிற்சி அளித்தனர். இதனால் ஏற்பட்ட ஆர்வத்திலும் தொழிலாளர் பற்றாக்குறை காரணமாகவும் எனது வயலில் மணிலா இயந்திரம் மூலம் விதைப்பதென முடிவெடுத்து நெமிலி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அருணாகுமாரியை அணுகிய போது அவர் அட்மா திட்டத்தில் வரப்பெற்ற 2025 - 26 ஆம் ஆண்டிற்கான மணிலா இயந்திர நடவு செயல் விளக்கத்தளை எனது வயலில் அமைத்து தருமாறு வட்டார தொழில்நுட்ப மேலாளர் நிர்மலா தேவி மற்றும் உதவித் தொழில்நுட்ப மேலாளர் முகிலன் ஆகியோருக்கு அறிவுறுத்தினார். அவர்களும் எனது வயலில் மணிலா இயந்திர நடவு செயல் விளக்கத்தளை அமைத்து தந்தனர்.

இயந்திரம் மூலம் மணிலா விதைப்பதால் விதைகள் சீரான இடைவெளியில் நடவு செய்யப்பட்டு குறைந்த நேரத்தில் அதிக பரப்பளவை விதைக்க முடிந்தது. மேலும் விதை வீணாவதும்

குறைந்தது. இயந்திர நடவின் மூலம் தொழிலாளர் தேவையும் நடவுக்கான நேரமும் குறைந்து செடிகள் சீரான இடைவெளியில் வளர்ந்ததால் வயல் பராமரிப்பும் எளிதானது. இதனால் மொத்த சாகுபடி செலவில் கணிசமான சேமிப்பு ஏற்பட்டது. அறுவடை முடிவில் வழக்கமான முறையுடன் ஒப்பிடும் போது குறைந்த செலவில் நல்ல மகசூலை பெற்றேன் என அவர் மகிழ்வுடன் தெரிவித்தார்.

இயந்திர நடவு மூலம் நேரமும் செலவும் மிச்சமானதுடன் சரியான நேரத்தில் நடவு செய்ய முடிந்ததால் அதிக மகசூல் பெற்று நல்ல லாபமும் கிடைத்தது.

மணிலா இயந்திர நடவு தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் அதிகரித்து வரும் சாகுபடி செலவுக்கு ஒரு சிறந்த தீர்வாக அமைந்து வருவதுடன் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி குறைந்த செலவில் திறமையான சாகுபடி மேற்கொள்ள விரும்பும் விவசாயி களுக்கு இது பயனுள்ள மாற்று முறையாகும் என வேளாண்மை உதவி இயக்குனர் அருணாகுமாரி தெரிவித்தார்.

# நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்

சேலம், ஆக.14

சேலம் மாவட்டம், நரசிங்கபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் இப்கோ நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சி இப்கோ கள அதிகாரி அப்துல் ரஹ்மான், தலைமையில் நடைபெற்றது. இதில் 15க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் இப்கோ கள அதிகாரி நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி, நானோ காப்பர், நானோ ஜிங்க், உயிர் உரங்கள் மற்றும் சாகரிகா திரவ உரங்களை பயன்படுத்தும் முறை மற்றும் நன்மைகள் குறித்து விவரித்தார்.

மேலும், இப்கோ சங்கட ஹரன் பீமா யோஜனா காப்பீடு திட்டம் – நானோ உரங்கள் வாங்கும் விவசாயிகளுக்கு ரூ.2,00,000 வரை விபத்துக் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்பது குறித்தும் விவரிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளும் தங்கள் பயிர்களில் இனி இப்கோ நானோ உரங்களை பயன்படுத்துவோம் என மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நெல் பயிருக்கு பிறகு பயறு வகைகள், எண்ணெய் வித்துபயிர்கள் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகள் பயிற்சி



சிவகங்கை, ஆக.14

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை கீழ் இயங்கி வரும் (அட்மா-2026-27 ) விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் மூலம் (மாவட்டத்திற்குள்ளான விவசாயிகள் பயிற்சி) நெல் பயிருக்கு பிறகு பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகள் பயிற்சி புரைசடை உடைப்பு கிராமத்தில் நடைபெற்றது. இப் பயிற்சியில் புரைசடை உடைப்பு விவசாயிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சியில் காளையார்கோவில் வட்டார துணை வேளாண்மை அலுவலர் செந்தில், நெல் பயிருக்கு பிறகு உளுந்து, பாசிப்பயறு போன்ற பயறு வகைகளை நெல் தரிசிலும் மக்காச்சோளம், நிலக்கடலை, பருத்தி போன்ற பயிர்களையும் மாற்று பயிராக சாகுபடி செய்யலாம் என்றும், நெல் அறுவடைக்கு முன்னதாக, அதாவது ஈரப்பதம் இருக்கும் போது உளுற்து பாசிபயறு விதைகளை நிலத்தில் தூவலாம் என்றும், கூடுதல் உரம் மற்றும் பாரமரிப்பு அதிகம் தேவையில்லை என்றும், எஞ்சிய ஈரப்பதத்திலேயே பயிர்கள் நன்றாக வளரும் போன்ற தொழில்நுட்பங்களை எடுத்து கூறினார். நெல் தரிசு பயறு சாகுபடி பிரதம மந்திரி நுண்ணீர் பாசன திட்டத்தின் மூலம் சிறு / குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் தெளிப்பு நீர்ப்பாசனம் மற்றும் மழைத்தூவான் வழங்கப்பட்டு வருகிறது எனவும் வேளாண் இடுபொருட்கள் நுண்ணூட்டம் இடும் முறை பற்றி பேசினார்.

வேளாண்மைத் துறையின் மூலம் விநியோகிக்கப்படும், திரவ அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ரைசோபியம் இவை களை பயன்படுத்தி பயிர்களில் விதை நேர்த்தி செய்வதன் மூலம்

ஏற்படக் கூடிய பயன்பாடுகள் குறித்தும் விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

மேலும் இந்த பயிற்சியில் முனைவர் ராஜேஸ் நல்லையா நெல் அறுவடைக்கு பின் பயறு வகைக் தொழில்நுட்பங்களான பயறுவகை பயிர்களை ஏக்கருக்கு 10 கிலோ விதை என்றளவில் விதைக்கவேண்டும். 4 கிலோ டி.ஏ.பி உரத்தினை 4-6 லிட்டர் தண்ணீரில் ஊர வைக்க வேண்டும். பிறகு தெளிந்த கரைசலை மட்டும் எடுத்து 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத் தெளிப்பான் கொண்டு இலைகளில் நன்கு படும்படி தெளிக்க வேண்டும்.

நிலம் தயார் செய்தல், உயர் இரக விதை ரகங்களை தேர்வு செய்தல், உர மேலாண்மை, களை மேலாண்மை, ஒருங் கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை உண்மை மாதிரிகள் கண்டறிதல், கட்டுபடுத்தும் தொழில்நுட்பங்ளான இயற்கை, செயற்கை மற்றும் உழவியல் தொழில்நுட்பங்கள் முறையில் கட்டுபடுத்தல் மற்றும் எண்ணெய் வித்துபயிர்களில் நிலம் தயார் செய்தல், உயர் இரக விதை ரகங்களை தேர்வு செய்தல் மற்றும் மானாவாரியில் நிலக்கடலை சாகுபடி தொழில்பட்பங்கள் பற்றியும் அதன் மகசூல் விபரம் பற்றியும் மற்றும் கதிரி லெபாக்ஷி இரகம் மற்றும் நாட்டு இரகங்களின் குணாதிசய முறைகள் பற்றியும் நிலம் தயாரித்தல், உளிக் கலப்பையைக் கொண்டு மண் கடின அடுக்கை உடைத்தல், பாத்தி அமைத்தல், ஒருங்கிணைந்த ஊட்டசத்து மேலாண்மை, நுண்ணூட்ட சத்துகள் குறைபாடுகள் கண்டறியும் தொழில் நுட்பங்கள் மற்றும் நிவர்த்தி செய்யும் தொழில்நுட்பங்களும், விதை நேர்த்தி, இடைவெளி, மண் அணைத்தல், ஜிப்சம் இடுதல் மற்றும் ஒருங்கிணைந்த நோய் மற்றும் பூச்சி மேலாண்மை தொழில்நுட்பங்கள் பற்றியும் எடுத்து கூறினார்.

காளையார்கோவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜோதி, அட்மா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் விவசாயிகள் பயிற்சிகள் சம்பந்தமான உள் மற்றும் வெளிமாநில, மாவட்ட அளவிலான பட்டறிவு, கண்டுணர்வு பயிற்சிகள் செயல் விளக்கத் திடல்கள் அமைத்தல் தொடர்பாக திட்டங்களை பற்றி விவசாயி களுக்கு விரிவான முறையில் எடுத்துக் கூறினார். உழவர் செயலி பயன்படுத்தும் முறைகள் பற்றியும் மற்றும் அதில் உள்ள 24 முகப்பு விபரம் பற்றி விரிவாக எடுத்து கூறினார்.

இயற்கை முறையில் விவசாயம் செய்வது மண் வளத்தை பாதுகாத்தல், இயற்கை உர கரைசலான ஜீவாமிர்தம், கன ஜீவாமிர்தம் தயாரித்தல் மற்றும் அதன் பயன்பாடுகள் பற்றி எடுத்துக் கூறினார்.

மேலும் இப்பயிற்சியில் அட்மா திட்ட பணியாளர் உதவி தொழில்நுட்ப மேலாளர் காளிஸ்வரி, உயிர் உரமான ரைசோபியம் பயன்படுத்தி விதை நர்த்தி செயல்விளக்கம் செய்தும், பயிற்சிக்கு உண்டான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்.



# அயோத்தியா பட்டிணம் வட்டாரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு



சேலம், ஆக.14

சேலம் மாவட்டம், அயோத்தியா பட்டிணம் வட்டாரத்தில் மேட்டுப்பட்டி தாதனூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அருகில் வேளாண் துறை சார்பில் விவசாய அடையாள எண் பதிவு முகாம் நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.இளம்பகவத் ஆய்வு செய்தார். வேளாண்மைத் துறையின் அனைத்து திட்டங்களையும் பெற விவசாயிகள் அடையாள எண் பதிவு செய்வது அவசியமாகும். அந்த எண் மூலம் மட்டுமே விவசாயிகள் துறை சார்ந்த அனைத்து திட்டங்களையும் பெற முடியும். இதற்கு விவசாயிகள் தங்களின் ஆதார் எண், ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைப்பேசி எண் மற்றும் தங்களின் நிலத்தின் சர்வே எண் நகல் எடுத்து வந்து பதிவு செய்யுமாறும், வேளாண் துறை சார்ந்த அலுவலர்களை தொடர்பு கொண்டு பதிவு செய்ய அறிவுறுத்தினார்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் – வேளாண் துணை இயக்குனர் கமலம், வேளாண் துணை இயக்குனர் (வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத்துறை) சுஜாதா மற்றும் அயோத்தியா பட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சண்முகப்பிரியா, தோட்டக்கலை உதவி இயக்குநர் கோதைநாயகி, தோட்டகலை அலுவலர் கீர்த்தனா, வேளாண்மை அலுவலர் பிரியா, உதவி வேளாண்மை அலுவலர்கள் வரதராஜ், சரவணன் மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் தமிழ்ச்செல்வி, சக்கரவர்த்தி ஆகியோர் உடன் இருந்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# நெல், கரும்புக்கான குறைந்த பட்ச ஆதார விலை உயர்வு தெரியுமா?



தமிழக சட்டபேரவையில் 110 வது விதியின் கீழ் தமிழக முதல்வர் விஜய் விவசாயி களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் இந்த இனிக்கும் விலை உயர்வு அறிவிப்பை வெளியிட்டார்.

**நெல், கரும்புக்கான விலை**

தமிழகத்தில் நிதிநிலை சரியில்லாமல் இருந்தாலும்கூட நெல், கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகளின் நலனை பாதுகாக்க வேண்டுமென கருதி, தமிழக வரலாற்றிலே இல்லாத அளவிற்கு மாநில அரசின் நெல் மற்றும் கரும்புக்கான ஊக்கத் தொகையுடன், கீழ்க்கண்ட விலை உயர்வை வெளியிட்டுள்ளார்.

**நெல் விலை + ஊக்கத்தொகை உயர்வு?**

நெல்லுக்கு குறைந்தபட்ச ஆதார விலையுடன் (MSP), மாநில அரசின் ஊக்க தொகையாக சன்ன ரக நெல்லுக்கு குவிண் டாலுக்கு ரூ.289ம், பொது ரக நெல்லுக்கு ரூ.159ம், உயர்த்தி மொத்த கொள்முதல் விலையாக சன்ன ரக நெல்லுக்கு ரூ.2750யும், பொது ரக நெல்லுக்கு குவிண்டால் ரூ.2600 என வழங்கப்படும்.

நெல்லுக்கான ஊக்கத் தொகையை ஒரு ஆண்டுக்கு 159க்கு மேல் வழங்கப்படுவது வரலாற்றிலேயே இதுவே முதல் முறையாகும். நெல் கொள்முதல் பருவம் வரும் செப்டம்பர் 1 ஆம் தேதி தொடங்கி விடும் என்பது குறிப்பிடத்தக்க தகவல்.

**கரும்பு விலை + ஊக்க தொகை உயர்வு எவ்வளவு?**

கரும்பு விவசாயிகளுக்கு மத்திய அரசு டன்னுக்கு ரூ.3290.50 என்று ஆதார விலை நிர்ணயம் செய்துள்ள நிலையில், அதற்கு மேல் தமிழக அரசு ஊக்கத் தொகையாக ரூ.709.50 நிர்ணயம் செய்துள்ள நிலையில், கரும்புக்கு டன் ஒன்றுக்கு, ரூ.4000 விலையாக நிர்ணயம் செய்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் 156 மட்டும் உயர்த்தப்பட்ட நிலையில், தற்போது முதல் ஆண்டிலேயே ரூ.360.50 உயர்த்தப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மாநில அரசின் கரும்பு சிறப்பு ஊக்கத்தொகையாக, டன் ஒன்றுக்கு ஓராண்டில் ரூ.134க்கு மேல் வழங்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

விவசாயிகளுக்கு தோள் கொடுக்கும் தோழனாக இந்த அரசு அமைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறை உதவி இயக்குநர் சோளம் விதைப்பண்ணையில் ஆய்வு



கோயம்புத்தூர், ஆக.14


நல்ல விளைச்சல் தரக் கூடிய சான்று விதை உற்பத்தியை அதிகரிக்க வேளாண்மைத் துறை மூலமாக மானிய விலையில் விதைகளை விவசாயிகளுக்கு வழங்கி, அவர்களை விதை உற்பத்தியாளர்களாக்கி விதைச்சான்றுத் துறையின் மூலம் பயரின் பல்வேறு வளர்ச்சிப் பருவங்களில் ஆய்வு செய்யப்பட்டு, தரமான சான்று விதைகள் விவசாயிகளுக்கு கிடைத்திட வழி வகை செய்யப்படுகின்றது.

இதன் தொடர்சியாக கோவை, விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர், இரா.சக்திவேல், சூலூர் பகுதியில் உள்ள சோளம் விதைப்பண்ணைகளை ஆய்வு மேற்கொண்டு அவர் கூறியதாவது, சோளம் CO-32 இரக மானது காரீப் பருவத்திற்கு ஏற்ற இரகமாகும்.

105-110 நாட்களில் முதிர்ச்சியடையும். இதில் தானிய மகசூல் எக்டருக்கு 2400 கிலோவும், மற்றும் தீவன மகசூல் எக்டருக்கு 6500 கிலோ வரை கிடைக்கும். தானியமாகவும், சோளத்தட்டை கால்நடைகளுக்கான தீவனமாகவும் இரட்டிப்பு பயன் தரக் கூடியது. இதன் கதிர்கள் மஞ்சள் கலந்த வெள்ளை நிறத்தில் இருக்கும். மேலும், சோளப் பயிர்களைத் தாக்கும் தண்டு துளைப்பான் பூச்சிகளுக்கு மிதமான எதிர்ப்புச்சக்தி உடையது.

சோள விதைப்பண்ணையில் மூன்று நிலையில் விதைச் சான்றளிப்பு துறையிலிருந்து வயலாய்வு மேற்கொள்ளப்படும். முதலாம் மற்றும் இரண்டாம் வயலாய்வில் பயிர் வளர்ச்சி பூக்கும் பருவத்தில் அதாவது 45 மற்றும் 70 நாட்களில் ஆய்வு செய்யப்படும். பயிர் விலக்கு தூரம், கலவன் நீக்குதல் தரமான விதை உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது, ஆதாரநிலை விதையில் 0.05% மற்றும் சான்று விதையில் 0.1 % கலவன் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. மூன்றாவது வயலாய்வு முதிர்வு பருவத்தில் (90வது நாளில்) கலவன் அகற்றுதல் மற்றும் குறித்தறிவிக்கப்பட்ட நோய், சோளத்தில் கரிப்பூட்டை என்ற நோய் தாக்குதலின் சதவீதம் கண்டறியப்படும். இந்த வயல் தரங் களில் தேர்ச்சி பெற கூடிய விதைப்பண்ணைகளை அறுவடை செய்ய அனுமதிவழங்கப்படுகிறது. அவ்வாறு அறுவடை செய்த விதைப்பண்ணைகளின் வயல்மட்ட விதைகள் சுத்தம் செய்து அங்கீகரிக்கப்பட்ட விதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு சுத்தி பணி மேற்கொள்ளப்படுகிறது. சுத்தி செய்த குவியலிலிருந்து 1000 கிராம் விதை மாதிரி எடுத்து அரசு அங்கீ காரம் பெற்ற விதை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி, விதை தரங்களில் பகுப்பாய்வு முடிவில் தேர்ச்சி பெற்ற விதை களை சான்று நிலை என்றால் நீல நிற அட்டைகளும் ஆதார நிலை என்றால் வெள்ளை நிற அட்டைகளும் பொருத்தி ஒரு கொள்கலனுக்கு 15 கிலோ என்ற அளவில் உற்பத்தியாளர் அட்டையுடன் சான்றட்டை பொருத்தி விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

எனவே, விருப்பமுள்ள விவசாயிகள் விதைப்பண்ணைகளை அமைத்தால் விதைச்சான்றளிப்புத்துறை மூலம் தகுந்த வயல் ஆய்வு பணிகளை மேற்கொண்டும், தரமான விதை உற்பத்தி செய்யும் வழிமுறைகளை வழங்கி அதிக மகசூல் பெற்று அதிக வருமானம் பெறவழி வகை செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார். ஆய்வின் போது அன்னூர் விதைச்சான்று அலுவலர் சதாசிவம், உதவி விதை அலுவலர் இலட்சுமணன் உடனிருந்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# பெண்களுக்கான விழிப்புணர்வு மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சி



தஞ்சாவூர், ஆக.14

திண்டுக்கல், காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த B.Sc. (ஹானர்ஸ்) வேளாண்மை இறுதி ஆண்டு மாணவிகள் தனுஷியா, கீர்த்தனா, ஜீவிதா, பிரதீபா, அகல்யா மற்றும் ப்னா ஆகியோர், தங்களது கிராமப்புற வேளாண் அனுபவப் பயிற்சியின் (RAWE - Rural Agricultural Work Experience) ஒரு பகுதியாக, தஞ்சாவூர் மாவட்டம், குறுங்குளம் ஊராட்சிக்கு உட்பட்ட சர்க்கரை ஆலையில் பெண்களுக்கான சிறப்பு விழிப்புணர்வு மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் பெண்களுக்கு குறுவை சிறப்புத் தொகுப்பு, இயற்கை உரம் (கம்போஸ்ட் உரம்) தயாரிப்பு மற்றும் தமிழ்நாடு பெண்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (வீநிசிசிறீ) ஆகியவை குறித்து பயனுள்ள தகவல்கள் மற்றும் செயல் விளக்கங்கள் வழங்கப்பட்டன.

## குறுவை சிறப்புத் தொகுப்பு

குறுவை நெல் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் அரசு வழங்கும் பல்வேறு வேளாண் இடுபொருட்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் குறித்து பெண்களுக்கு மாணவிகள் விளக்கினர். மேலும், இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் உதவிகள் மற்றும் அவற்றைப் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்தும் எடுத்துரைத்தனர்.

## இயற்கை உரம் தயாரிப்பு செயல்விளக்கம்

வீட்டில் கிடைக்கும் காய்கறி மற்றும் பழக்கழிவுகள், உலர்ந்த இலைகள், மண் போன்றவற்றைப் பயன்படுத்தி எளிய முறையில் கம்போஸ்ட் உரம் தயாரிக்கும் முறையை பெண்களுக்கு

நேரடியாக செயல்விளக்கம் அளித்தனர். கம்போஸ்ட் உரத்தின் பயன்பாடுகள் மற்றும் மண்ணின் வளத்தை மேம்படுத்துவதில் அதன் முக்கியத்துவம் குறித்தும் விளக்கப்பட்டது.

**தமிழ்நாடு பெண்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (TWEES)**

பெண்கள் சுயதொழில் மற்றும் தொழில்முனைவில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் வீநிசிசிறீ திட்டம் குறித்து பெண்களுக்கு சிறப்பு விழிப்புணர்வு வழங்கப்பட்டது. திட்டத்தின் நோக்கம், தகுதிகள், நிதி உதவி மற்றும் விண்ணப்பிக்கும் முறைகள் குறித்து மாணவிகள் தெளிவாக எடுத்துரைத்தனர்.

இத்திட்டத்தின் மூலம் பெண்கள் புதிய தொழில் தொடங்கி தங்களது வருமானத்தையும் பொருளாதார நிலையையும் மேம்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் குறித்து விளக்கினர்.

இந்நிகழ்ச்சியின் மூலம் பெண்கள் அரசு வழங்கும் வேளாண் நலத்திட்டங்கள், வீட்டிலேயே இயற்கை உரம் தயாரிக்கும் முறை மற்றும் பெண்களுக்கான தொழில் முனைவோர் வாய்ப்புகள் குறித்து பயனுள்ள தகவல்களை அறிந்து கொண்டனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெண்கள் மாணவிகளின் முயற்சிக்கு தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

## பயிர் காப்பீடு செய்து கொள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர் வேண்டுகோள்

புதுக்கோட்டை, ஆக.14

பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நடப்பு 2026 குறுவை பருவத்தில் தோட்டக்கலை பயிர்களை பொது சேவை மையங்கள், தொடக்க வேளாண் கடன் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் காப்பீடு செய்து கொள்ள காளிச்சரன், தோட்டக்கலை உதவி இயக்குநரின் வேண்டுகோள்.

இயற்கை சீற்றங்களால் ஏற்படும் பயிர் இழப்பிலிருந்து விவசாயிகளின் நலன் மற்றும் வாழ்வாதாரம் பாது காக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சரின் உத்தரவின்படி 2026-27ஆம் ஆண்டில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தற்போது நிலவும் எல் நினோ நிகழ்வின் தாக்கத்தால் தென்மேற்கு பருவமழை இயல்பைவிடக் குறைவாக இருக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், குறுவை மற்றும் மானாவாரி பயிர்கள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில் புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டாரத்தில் வாழைப் பயிருக்கு கல்லாக்கோட்டை, புது நகர், கந்தர்வக்கோட்டை ஆகிய குறுவட்டங்களும் ,மரவள்ளிப் பயிருக்கு கந்தர்வக்கோட்டை வட்டாரத்தில் புதுநகர் குறுவட்டமும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. வாழை பயிருக்கு ஒரு ஹெக்டருக்கு பிரிமியம் தொகை ரூ.8966.10 பயிர் காப்பீடு தொகை ரூ.1,79,322 மற்றும் மரவள்ளி பயிருக்கு பிரிமியம் தொகை ரூ.4199 பயிர் காப்பீடுதொகை ரூ.83,980 ஆகும்.

அறிவிக்ை கசெய்யப்பட்ட குறுவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் மேற்குறிப்பிட்ட பயிர்களுக்கு 25.06.26 முதல் தேசிய பயிர்க் காப்பீட்டு இணையதளத்தில் காப்பீடு செய்து கொள்ளலாம். வாழை மற்றும் மரவள்ளி ஆகிய பயிர்களுக்கு 15.09.26 வரை காப்பீடு செய்து கொள்ளலாம்.

இத்திட்டத்தின் கீழ், மகசூல் இழப்பு, பகுதி சார்ந்த இடர் நிகழ்வுகளான வெள்ளம், மேகவெடிப்பு, இயற்கை தீ அல்லது காட்டுத் தீ, ஆலங்கட்டி புயல் மற்றும் நிலச்சரிவு ஆகிய வற்றினால் ஏற்படும் இழப்பு போன்ற இனங்கள் காப்பீடு செய்யப்படுகின்றன.

எனவே, கடன் பெறும் விவசாயிகள் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களைத் தொடக்க வேளாண்மை கடன் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் காப்பீடு செய்து கொள்ளலாம். கடன் பெறாத விவசாயிகள் பொது சேவை மையங்கள் (இ.சேவை மையங்கள்) அல்லது தேசிய பயிர்க் காப்பீட்டு இணைய தளத்தில் (https://pmfby.gov.in/) உள்ள 'விவசாயிகள் கார்னர்' வாயிலாக நேரடியாகவும் பதிவு செய்து கொள்ளலாம். காப்பீடு செய்வதற்கான இறுதி தேதி எக்காரணத் திற்காகவும் நீட்டிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் போது முன்மொழிவு விண்ணப்பத்துடன், பதிவு விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல் / விதைப்பு அறிக்கை, கணக்கு புத்தகத்தின் (Bank pass book) முதல் பக்க நகல், ஆதார் அட்டை (Aadhaar Card) நகல் ஆகியவற்றை இணைத்து கட்டண

தொகையை செலுத்திய பின் அதற்கான இரசீதையும் பெற்றுக் கொண்டு, அதில் தாங்கள் காப்பீடு செய்த பயிர் மற்றும் அதற்கான கிராமம் / குறுவட்டம் உள்ளிட்ட விவரங்கள் சரியாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் விபரங்களுக்கு வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் வங்கி கிளைகளையோ அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தொடர்புக்கு : 99442 13234.



# வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் விவசாயிகளுக்கு மண்வள மேலாண்மை பயிற்சி

ஈரோடு, ஆக.14

ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கீழ் செயல்படும் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் விவசாயிகளுக்கு மண்வள மேலாண்மை பற்றிய பயிற்சி நடைப்பெற்றது.

இது குறித்து ஈரோடு மற்றும் சென்னிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சி.சசிகலா அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது. ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கீழ் செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் ஒண்டிகாரன்பாளையம் கிராமத்தில் விவசாயிகளுக்கு மண்வள மேலாண்மை பற்றிய பயிற்சி நடைப்பெற்றது. இந்த பயிற்சியினை வேளாண்மை அலுவலர் தி.நிவேதா, தலைமை ஏற்று துவக்கி வைத்தார். மேலும் மண் பரிசோதனை முடிவின் அடிப்படையில் சமச்சீர் முறையில் உர மேலாண்மை மேற்கொள்ள வேண்டும் என்பதை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். நடமாடும் மண் பரிசோதனை வாகனம் மூலம் 44 மண் மாதிரிகள் மற்றும் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு மண் பரிசோதனை செயல்விளக்கமாக செய்து காட்டப்பட்டது.

கோபிசெட்டிபாளையம், வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானி சிவா, கலந்து கொண்டு மண் பரிசோதனை மூலம் உரமேலாண்மை மேற்கொள்வதன் அவசியம், ஒவ்வொரு பயிர் சாகுபடி செய்வதற்கு முன்பும் விவசாயிகள் மண் பரிசோதனை செய்து கொண்டு அதன் அடிப்படையில் உரமிடவேண்டும் என்பதை வலியுறுத்தி கூறினார்.

ஈசா சேவா சங்கம் – மண் காப்போம் இயக்கம் சார்பாக ச.சுபாஷ், கலந்து கொண்டு மண்ணில் உள்ள நுண்ணுயிர் களை பாதுகாப்பதன் மூலம் மண் வளத்தை எவ்வாறு மேம் படுத்துவது என்பதை தெளிவாக எடுத்துரைத்தார். மண்ணில் உள்ள கார்பன் அளவு குறையாமல் பாதுகாக்கும் முறைகளை தெளிவாக எடுத்துரைத்தார்.

தழைச்சத்து பயிர்களை பயிர் செய்து மடித்து உழுவதன் மூலம் மண்ணின் வளம் மேம்படும் என்பதை தெளிவாக எடுத்துரைத்தார்.

வேளாண்மை அலுவலர், நடமாடும் மண் பரிசோதனை நிலையம், ஈரோடு து.மேகலா, மண்மாதிரிகள் எப்படி சேகரித்து ஆய்வகத்திற்கு அனுப்பி வைப்பது என்பதைப் பற்றிய செயல் விளக்கமாக வயலில் செய்து காட்டினர். விவசாயிகளுக்கு மண்மாதிரிகள் சேகரிப்பதைப் பற்றிய அச்சுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.சா.கிருத்திகா, அட்மா திட்டங்களின் செயல்பாடுகள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். உதவி வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.செங்கோட்டையன், உழவன் செயலி மூலம் இடுபொருட்கள் பதிவு செய்யும் முறைகளை தெளிவாக எடுத்துரைத்தார். உதவி வட்டார தொழில்நுட்ப மேலாளர் இ.வைஜெயந்தி, விவசாயிகள் வேளாண் அடுக்கு திட்டத்தின் மூலம் அடையாள அட்டை பெறும் முறைகளை செயல் விளக்கமாக செய்து காட்டினார்.

## PRA நுட்பங்கள் வட்ட விளக்கப்படம் மற்றும் வென் வரைபடம் விளக்கம்

தேனி, ஆக.14

11.08.26 அன்று AEX 421 - Rural Agricultural Work Experience and Agro Industrial Attachment (0+20) பாடத்திட்டத்தின் கீழ், தேனி மாவட்டம், கம்பம் வட்டாரத்தில் விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடையே பங்கேற்பு கிராமப்புற மதிப்பீட்டு (Participatory Rural Appraisal - PRA) நுட்பங்களான வட்ட விளக்கப்படம் (Pie Chart) மற்றும் வென் வரைபடம் (Venn Diagram) குறித்த செயல்பாடு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சி பாட ஆசிரியர் Dr.M.Jayanthi மற்றும் குழு ஆலோசகர் Dr.S.Mudhalvan ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ், Lokeswaran, Mohammed Shiban, Santhosh Kumar, Selva Kumar மற்றும் Ezhilarasan ஆகிய மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

கிராமப்புற சமூகங்கள் மற்றும் வேளாண் அமைப்புகளை எளிய முறையில் புரிந்துகொள்வதே இச்செயல்பாட்டின் முக்கிய நோக்கமாகும்.




மாணவர்கள் வண்ணமயமான வட்ட விளக்கப்படத்தை தயாரித்து, பயிர் சாகுபடி முறைகள், நிலப் பயன்பாடு, வருமான ஆதாரங்கள், பாசன வசதிகள், கால்நடை வளர்ப்பு, விவசாயிகளின் பயிர் தேர்வுகள் மற்றும் பிற வேளாண் வளங்கள் போன்ற தகவல்களை விகிதாசார அடிப்படையில் எவ்வாறு காட்சிப்படுத்தலாம் என்பதை விளக்கினர்.

வட்ட விளக்கப்படத்தின் ஒவ்வொரு பகுதியும் ஒரு குறிப்பிட்ட தகவலைக் குறிக்கும் வகையிலும், அதன் அளவு அந்தத் தகவலின் விகிதத்தை வெளிப்படுத்தும் வகையிலும் அமைக்கப் பட்டது. மேலும், வென் வரைபடத்தின் மூலம் விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் பல்கலைக்கழகங்கள், வங்கிகள், கூட்டுறவு சங்கங்கள், வேளாண் இடுபொருள் விற்பனையாளர்கள், சந்தைகள், விவசாயிகள் குழுக்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் விரிவாக்க நிறுவனங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்களுக்கு இடையேயான தொடர்புகள் விளக்கப்பட்டன. வட்டங்களின் அளவு மற்றும் அமைவு, ஒவ்வொரு நிறுவனத்தின் முக்கியத்துவம், செல்வாக்கு மற்றும் விவசாயிகளுடனான தொடர்பின் அளவை வெளிப்படுத்தும் வகையில் பயன்படுத்தப் பட்டது. PRA நுட்பங்கள் மூலம் விவசாயிகளின் நேரடி பங்கேற்பு, உள்ளூர் அறிவு, சமூக வளங்கள், பிரச்சினைகள் மற்றும் நிறுவனங்களுடனான தொடர்புகள் ஆகியவற்றை அறிந்து கொண்டு, கிராமப்புற வளர்ச்சிக்கான சிறந்த திட்டமிடலை மேற்கொள்ள முடியும் என்பதை மாணவர்கள் எடுத்துரைத்தனர். வண்ணமயமான வரைபடங்கள் விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்து, அவர்களுடன் பயனுள்ள கலந்துரையாடலை ஏற்படுத்தின. இச்செயல்பாடு மாணவர் களுக்கு விவசாயிகள் தொடர்பு, சமூகப் பங்கேற்பு, தகவல் சேகரிப்பு, காட்சிப்படுத்தல் மற்றும் வேளாண் விரிவாக்கப் பணிகள் குறித்த நடைமுறை அனுபவத்தை வழங்கியது. மொத்தத்தில், வட்ட விளக்கப்படம் மற்றும் வென் வரைபடம் ஆகியவை கிராமப்புற தகவல்களை எளிமையாகப் புரிந்து கொள்ளவும், பகுப்பாய்வு செய்யவும், விவசாயிகளுடன் பகிர்ந்து கொள்ளவும் உதவும் பயனுள்ள PRA கருவிகள் என்பதை இச்செயல்பாடு வெற்றிகரமாக எடுத்துக்காட்டியது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பெரியேரியில் அட்மா திட்டத்தில் சமச்சீர் உரப் பயன்பாடு பயிற்சி



சேலம், ஆக.14

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரம், பெரியேரி கிராமத்தில் அட்மா (ATMA) திட்டத்தின் கீழ் 'சமச்சீர் உரப் பயன்பாடுகள்' குறித்த விவசாயிகள் பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற்றது. இம்முகாமிற்கு தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வேல்முருகன் தலைமை தாங்கி உரையாற்றினார். அப்போது அவர், மண் வளத்தைப் பாதுகாப்பதிலும், நஞ்சில்லா உணவை உற்பத்தியாக்குவதிலும் இயற்கை விவசாயத்தின் பங்கு குறித்தும், அதன் முக்கியத்துவம் குறித்தும் விவசாயி களுக்கு விரிவாக எடுத்துரைத்தார். தொடர்ந்து, வேளாண்மை அலுவலர் ஜானகி, வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் மானிய உதவிகள் குறித்து விளக்கமளித்தார்.

இப்பயிற்சியில், பயிற்சியாளர் பிரவீன் உயிர் உரங்களின் பயன்கள், உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளின் அவசியம், மண் மாதிரி எடுக்கும் முறைகள் மற்றும் பசுந்தாள் உரப்பயிர்களின் முக்கியத்துவம் குறித்து விவரித்தார். அதைத் தொடர்ந்து, உதவி வேளாண்மை அலுவலர் கார்த்திக் குறைந்த நீரில் அதிக மகசூல் பெற உதவும் நுண்ணீர் பாசனம் அமைக்கும் முறைகள் மற்றும் பி.எம். கிசான் (ஊணனி-லுணுறீபுஹி) திட்டத்தின் பலன்கள் குறித்து எடுத்துரைத்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி, மக்காச்சோளப் பயிரில் நவீன சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் பூச்சி மேலாண்மை முறைகள் குறித்து விவசாயிகளுக்குச் சாகுபடி ஆலோசனை களை வழங்கினார்.

உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ரமேஷ் மற்றும் முத்துவேல் ஆகியோரின் சிறப்பான ஏற்பாட்டில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமில், பெரியேரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரம்

# பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் இணைந்து கட்டுப்படுத்த வேண்டுகோள்

திருச்சி, ஆக.14

நாடு முழுவதும் ஆகஸ்ட் 16 முதல் 22 வரை பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக்கப்படுவதை முன்னிட்டு, விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பார்த்தீனியம் (Partheni-umhysterophorus) களையை பூக்கும் முன்பே கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேளாண் அறிவியல் நிலையம், சிறுகமணி அறிவுறுத்தியுள்ளது.

பார்த்தீனியம் மிகவும் வேகமாக பரவும் ஆக்கிரமிப்பு களை யாகும். இது விவசாயப் பயிர்களின் வளர்ச்சியையும் மகசூலையும் பாதிப்பதுடன், மனிதர்களுக்கு தோல் அரிப்பு, ஒவ்வாமை, சுவாசக்கோளாறுகள் போன்ற உடல்நலப் பிரச்சினைகளையும் ஏற்படுத்துகிறது. மேலும், கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்களை பாதித்து சுற்றுச்சூழல் சமநிலையையும் சீர்குலைக்கிறது.

பார்த்தீனியத்தை கட்டுப்படுத்த பூக்கும் முன்பே செடிகளை வேரோடு பிடுங்கி அகற்ற வேண்டும். அகற்றும் போது கையுறை, முகக்கவசம் மற்றும் காலணிகளை பயன்படுத்துவது அவசியம். அகற்றிய செடிகளை பாதுகாப்பான முறையில் குழியில் புதைக்கவோ அல்லது உரிய முறையில் அழிக்கவோ வேண்டும்.

பயிர் இல்லாத இடங்களில் பரிந்துரைக்கப்பட்ட களைக் கொல்லிகளை தேவைக்கேற்ப பயன்படுத்தலாம். மேலும், சைகோகிராம்மா பைக்கலோராட்டா என்ற உயிரியல் கட்டுப்பாட்டு வண்டு பார்த்தீனியத்தின் வளர்ச்சியை இயற்கையாகக் கட்டுப்படுத்த உதவுகிறது.

சாலையோரங்கள், கால்வாய்கள், காலி இடங்கள், புறம் போக்கு நிலங்கள் மற்றும் மேய்ச்சல் நிலங்களில் காணப்படும் பார்த்தீனியத்தை கிராமமக்கள், விவசாயிகள், மாணவர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் இணைந்து அகற்றும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரத்தையொட்டி வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் விழிப்புணர்வு கூட்டங்கள், களப் பயிற்சிகள், துண்டுப் பிரசுரங்கள் வழங்குதல் மற்றும் களை அடையாளம் காணும் செயல் விளக்கங்கள் நடத்தப்பட உள்ளன.

"பூக்கும் முன் பார்த்தீனியத்தை அகற்றுவோம் - மனித நலம், கால்நடை நலம், விவசாய வளம் காப்போம்" என்ற விழிப்புணர்வு முழக்கத்துடன் அனைவரும் இந்த இயக்கத்தில் பங்கேற்குமாறு வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தெரிவித்தார்.

